மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் தை மாதம் 25-ம் நாள்
2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08-ம் நாள் வியாழக் கிழமை

**EA 2/2023/in/EP 49/2022/in/OS 157/2012**

1. கலாராணி
2. பிரபாவதி :: மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள்

**/எதிர்/**

அம்சம் மாரியம்மாள் :: எதிர்மனுதாரர் / மனுதாரர்

-------

இம்மனுவானது 30-01-2024-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. கணேசன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. கருப்பசாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதார்கள் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள SA (MD) SR No.4930/2023 இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கில் உத்தரவு ஏற்படும்வரை மூல நிறைவேறுதல் மனு நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து (stay) உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.08 16:44:41 +0530

2) <u>மனுதாரர்கள் / எதிர்மனுதார்கள் தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்:</u>

மனுதார்கள் / எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண்.157/2012 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த AS 9/2016 மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும் , தற்போது மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் SA (MD) SR No.4930/2023 இரண்டாம் மேல்முறையீடு காலதாமத மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, மேற்படி இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கில் உத்தரவு ஏற்படும் வரை மூல நிறைவேறுதல் மனு நடவடிக்கையை நிறுத்தி வைக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் / மனுதார் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்.</u>

மனுதார்கள் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்பதை எதிர்மனுதார் அறிந்த நிலையில், தற்போது இரண்டாம் மேல் முறையீடு செய்துள்ளதாக கூறியுள்ளது ஏற்புடையதல்ல. அவ்வாறு இரண்டாம் மேல்முறையீடு மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், மேற்கண்ட நீதிமன்றத்திலதான் தடை உத்தரவு பெற முடியுமே தவிர இந்நீதிமன்றத்தில் பெற இயலாது. மேலும், மனுதார்கள் கால தாமத மனுவுடன் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

5) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6) <u>பிரச்னைக்கான தீர்வு:</u>

மனுதார்கள் / எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண்.157/2012 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த AS 9/2016 மேல்முறையீடு தள்ளுபடி

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.08 16:44:47 +0530

செய்யப்பட்டுவிட்டது என்றும், தற்போது மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் SA (MD) SR No.4930/2023 இரண்டாம் மேல்முறையீடு காலதாமத மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, மேற்படி இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கில் உத்தரவு ஏற்படும் வரை மூல நிறைவேறுதல் மனு நடவடிக்கையை நிறுத்தி வைக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**7)** எதிர்மனுதார் / மனுதார் தரப்பில் இரண்டாம் மேல்முறையீடு மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், மேற்கண்ட நீதிமன்றத்திலதான் தடை உத்தரவு பெற முடியுமே தவிர இந்நீதிமன்றத்தில் பெற இயலாது என்றும், மேலும், மனுதார்கள் கால தாமத மனுவுடன் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8)** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் அசல் வழக்கானது 2012-ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு 19-08-2014-ம் தேதி எதிர்மனுதார் / வாதிக்கு ஆதரவாக தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள் ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் தாவா சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் ஒப்படைக்காததன் காரணமாக வாதியால் மூல நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அசல் வழக்கின் தீர்ப்பாணையை எதிர்த்து மனுதார்கள் / பிரதிவாதிகள் மாண்புமிகு உத்தமபாளையம் சார்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் SA (MD) SR No.4930 /2023 என்ற இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி இரண்டாம் மேல் முறையீட்டில் உத்தரவு பெறும்வரை மூல நிறைவேறுதல் மனு நடவடிக்கையை நிறுத்தி வைக்ககோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.08 16:44:54 +0530

9) மனுதார்கள் இரண்டாம் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளதாக எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் வாய்மொழியபாக இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக கூறுவது ஏற்புடையதல்ல. அசல் வழக்கில் 2014–ம் வருடம் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு தற்போது வரை சுமார் 9 வருடங்களுக்கும் மேலாகியுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும் அதில் உத்தரவு பெற்று வரும்வரை மூல நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் கூறுவது ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நீதிமன்றத்திலேயே தடை உத்தரவு பெறமுடியாது என்பது சட்டவிதியாகும். மனுதார்கள் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்கண்ட நீதிமன்றத்தில் மூல நிறைவேற்று மனு நடவடிக்கைகைய நிறுத்தி வைக்க எந்த ஒரு தடை உத்தரவும் பெற்றுள்ளதாக மனுதார்கள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

10) எனவே, அசல் வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் தீர்ப்பின் பலனை கடந்த 9 ஆண்டுகளுக்கும் மேலாக எதிர்மனுதார் / வாதி பெறமுடியாமல் இருப்பது தெரியவருவதாலும், மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையிலும் மனுதார்கள் தாக்கல் செய்துள்ள இந்த அனுமதிக்கத்தக்கதாக இல்லை என்று கருதி மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

11) இறுதியாக,

| | |
|---|---|
| 1. | EA 2 / 2023 மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.08 16:45:00 +0530

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரி வடிவில் எடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 08-02-2024-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.08 16:45:06 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

-

E.A. 2/2023

in

EP 49 / 2022

in

OS 157/2012

FAIR / DRAFT ORDER

Date : 08-02-2024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் தை மாதம் 25–ம் நாள்
2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08–ம் நாள் வியாழக் கிழமை

**EA 2/2023/in/EP 49/2022/in/OS 157/2012**

| | |
|---|---|
| 1. | Kalarani, W/o. Raja, D.No.82C, Ward No.3, Ellai Street, Kellagudalur Village, Uthamapalayam Taluk, Theni District. |
| 2 | Prabavathy, W/o. John Selvaraj, D.No.82C, Ward No.3, Ellai Street, Keelagudalur Village,Uthamapalayam Taluk, Theni District. |

.... மனுதாரர்கள் /எதிர்மனுதார்கள்

| | |
|---|---|
| 1 | Amsam Mariammal, W/o/ John Backiyam, Savadi Street, Royappanpatti Village, thamapalayam Taluk, Theni District. |

... எதிர்மனுதார்/ மனுதார்

மனுதார்கள் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள SA (MD) SR No.4930/2023 இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கில் உத்தரவு ஏற்படும்வரை மூல நிறைவேறுதல் மனு நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து (stay) உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 14–09–2023 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/– செலுத்தப்பட்டது. |

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.08 16:45:14 +0530

இம்மனுவானது 30-01-2024-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் T. கணேசன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. கருப்பசாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**<u>நிறைவேற்றாணை</u>**

| | |
|---|---|
| 1. | EA 2 / 2023 மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

**<u>செலவுத் தொகை இல்லை</u>**

2024-ம் வருடம் பிப்ரவரி மாதம் 08-ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.08 16:45:21 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

EA 2/2023
in
EP 49 / 2022
in
OS 157/2012
EX ORDER
Date : 08-02-2024